**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **SC.No. 2/ 2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா**. 8**
**Defence**
**Court**

**Name : தங்கத்துரை**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 16th September 2021.

முதல் விசாரணை:

நான் தென்காசியில் மலையான் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் மட்டன் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். இறந்தபோன சுரேஷ், சேகர், செந்தில் என்ற செந்தில் குமார் ஆகியோரை எனக்கு தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 14.08.2007 அன்று காலை நானும் என் நண்பர்களான மலையான் தெருவைச் சேர்ந்த வள்ளிநாயகம் மகன் சண்முகம், பிச்சையாதேவர் மகன் பிஸ்தா மணி (எ) மணிகண்டன், மணிகண்டன் என்ற குட்டிமணி, மாலையப்பன்,

தட்சினாமூர்த்தி, இசக்கிமுத்து (எ) கேபிள் முத்து, ரமேஷ் (எ) ஆட்டோ ரமேஷ், அலெக்ஸ் (எ) அலெக்ஸாண்டர், ஆபிரகாம், பேரின்பராஜ், ஆகியோர்கள் கூளக்கடை பஜார் அருகில் நின்றுகொண்டிருந்தோம் என்றும் காலை 10.15 மணிக்கு தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டுவிட்டு தென்காசி மவுண்ட்ரோடு மீரான் மைதீன் மகன் அலாவூதீன், அவருக்கு பின்னால் வந்த ஹனிபா (எ) நாகூர் ஹனிபா, முருகேசன் என்ற அப்துல்லா, நாகூர்மீரான், செய்யது சுலைமான் சேட் மற்றும் அவர்கள் கூட்டாளிகள் சேர்ந்து மேல முத்தாரம்மன் கோவில் தெருவில் கிழக்கிலிருந்து மேற்காக நண்பர்களுடன் அம்பாசிட்டர் காரில் வந்த சக்திபாண்டியனை காருடன் வழிமறித்து அருவாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் திபு திபுவென்று கீழே இறங்குவதை பார்த்தவுடன் சக்திபாண்டியன் மற்றும் அவருடன் வந்தவர்களும் காரை விட்டு இறங்கி கிழக்கு நோக்கி ஓட ஆரம்பித்தார்கள் என்றும், வி.டி.எஸ் குடோனுக்கு கீழ்புறமுள்ள சந்துக்குள் இருந்து ஆயுதங்களுடன் ஓடி வந்த அவர்களது கூட்டாளிகளான சம்சுதீன், பஸ்லூதீன், மீரான் மைதீன், மசூது, மேசாக் என்ற முகம்மது இஸ்மாயில் மற்றும் அவர்களது கூட்டாளிகள் சக்திபாண்டியன் வகையறாக்களை வழிமறித்தார்கள் என்றும், அவர்கள் மேற்கு பார்த்து வரும்போது சக்திபாண்டியனின் தம்பிமார்களையும் அவர்கள் நண்பர்களையும் அலாவூதீன் மற்றும் நாகூர் ஹனிபா, அவர்களது கூட்டாளிகளும் மறித்து அருவாள் மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களுடன் விரட்டி விரட்டி வெட்டியும், குத்தி தாக்கினார்கள் என்றும், பதிலுக்கு நாங்களும் தாக்கினோம் என்றும், குமார்பாண்டியன் தம்பி செந்தில் என்ற செந்தில்குமாரை அலாவூதீன் அருவாளால் தலையின் இடது பக்க காதுடன் சேர்த்தும், வலது கண் புருவத்துக்கு மேலும் வெட்டினார் என்றும், முகைதீன் மகன் நவாஸ் செந்திலின் வயிற்றின் வலது பக்கம் அருவாளால் வெட்டினான் என்றும், அபுல்ஹசன் மகன் செய்யது சுலைமான் சேட் என்ற சையது சுலைமான் சேட் செந்திலின் இடது தோள் பட்டையில் அருவாளால் வெட்டினான் என்றும், ஹைதர் அலி மகன் நாகூர் மீரான் செந்திலின் இடது கையில் மாறி மாறி அருவாளால் வெட்டினார் என்றும், சேகரை ஹனிபா என்ற நாகூர் ஹனிபா அருவாளால் தலையில் மாறி மாறி வெட்டினான் என்றும் கருப்பையாபிள்ளை மகன் முருகேசன் என்ற

அப்துல்லா அருவாளால் சேகரின் வலது முழங்கை, இடது முழங்கை, இடது விலா ஆகிய இடங்களில் கத்தியால் வெட்டினாரன் என்றும், சையது அப்பா மகன் அசன்கனி கத்தியால் சேகரின் வலது கை அக்குளுக்குள் குத்தினார் என்றும், முகைதீன் பிச்சை மகன் அபு அயூப் அன்சாரி அருவாளால் சேகரின் வலது முழங்கைக்கு மேல் வெட்டினார் என்றும், முகமது மகன் ராஜா முகம்மது அருவாளால் சேகரின் வலது உள்ளங்கையிலும், வலது காதுக்கு கீழும் வெட்டினான் என்றும், சுரேசை பீர் முகமது மகன் பஷீர் அருவாளால் வலது கை மணிகட்டு, மார்பு ஆகிய இடங்களில் வெட்டினான் என்றும், சாகுல் ஹமீது மகன் செய்யது அலி பட்டாக்கத்தியால் சுரேஷின் முகத்தோடு சேர்த்து வெட்டினார் என்றும், முகது ஹனிபா மகன் மீரான் மைதீன் அருவாளால் சுரேஷின் கழுத்தில் வெட்டினான் என்றும், இந்த தாக்குதலில் நடக்கும் போது தடுக்க போன என்னையும் முருகேசன் என்ற அப்துல்லா இடது முழங்கையில் அருவாளால் வெட்டி காயப்படுத்தி விட்டான் என்றும் சம்பவ இடத்திலேயே சுரேஷ், சேகர், அசன்கனி ஆகியோர் இறந்து விட்டார்கள் என்றும், காயமடைந்த செந்தில் என்ற செந்தில்குமாரையும் மற்ற காயம்பட்டவர்களையும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் என்றும், செந்தில் என்ற செந்தில்குமார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார்கள் என்றும், மேலும் இரண்டு நபர்கள் இறந்து விட்டார்கள் என்றும், அவர்கள் தரப்பிலும் இரண்டு நபர்கள் இறந்து விட்டதாக கேள்விபட்டேன் என்று போலீஸ் விசாரணையில் வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் நாங்கள் சமாதானமாக போய்விட்டோம் என்பதால் அதன் அடிப்படையில் நடந்த சம்பவத்தை மறைத்து உண்மைக்கு மாறாக அரசு தரப்பு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**